உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகர் மன்றக் குழுவானது, இயற்கைச் சூழல் கொண்ட பிரதேசமாக ஆக்குவதற்கான யுக்தியை ஆமோதிக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 29, 2020) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் மாநகர மன்றமானது, ஒரு பசுமை நகரத்தை கட்டமைப்பதற்கும், இயற்கைச் சூழல் பூங்கா போன்ற அமைப்புக்கான யுக்தியை ஆமோதித்து நடைமுறைப்படுத்துவதற்கும், ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையை எடுத்தது.

ஒரு இயற்கைச்சூழல் பூங்கா என்பது நிலைத்து நிற்கவல்ல நகர்ப்புறம் மற்றும் இயற்கையான/பசுமையான இடங்களை ஒன்றோடொன்று இணைக்கின்ற வலையமைப்பாகும். ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவிற்கான வியூகமானது ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவை உருவத்திற்கு கொண்டுவருகிறது மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான தொலைநோக்குப்பார்வை, இலக்குகள் மற்றும் அவற்றுக்கான செயல்திட்டங்களை அமைக்கிறது. இந்த யுக்தியானது, தனித்துவமான சமூக வாய்ப்புகளை வழங்குவதோடு ப்ராம்ப்ட்டனின் இயற்கைச்சூழல் பூங்காவைப் பாதுகாக்கவும், ஆதரிக்கவும், வளர்ப்பதற்குமான சமூக கூட்டாண்மை மற்றும் அதனைச் செயல்படுத்துவதற்கான வழிநடத்தும் தன்மையை உருவாக்குவதையும் இந்த யுக்தி நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ப்ராம்ப்ட்டனின் இயற்கை நில எழிலைப் போற்றிக்காத்தல், மீண்டும் இயற்கையின் இயல்புக்கே விடுதல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல் ஆகியவற்றிலும் கவனம் செலுத்துகிறது.

ப்ராம்ப்ட்டன் மாநகரில் இருக்கின்றஇயற்கையான பாரம்பரிய அமைப்பிற்கு [Natural Heritage System (NHS)] சொந்தமான 2,500 ஹெக்டேர் நிலப்பரப்பின் பெரும்பான்மையான நிலமானது, ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவின் முதுகெலும்பாக அமைகிறது. இந்த அஸ்திவார நிலையிலிருந்து, ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவின் விரிவாக்கம் மற்றும் பரிணாம வளர்ச்சியானது, மக்கள் சங்கமிக்கும் இடங்களை அடையாளம் கண்டு அவற்றின் மீது கவனம் செலுத்தும்; அந்தந்த உரிய இயற்கையான இடங்களில் பூங்காக்கள், என்.எச்.எஸ்(NHS), எழில் நிறைந்த வீதிகள் மற்றும் பயன்பாட்டு தாழ்வாரங்கள் ஆகிய இடங்களை நிறுவுவதன் மூலம் இயற்கைச்சூழல் நிறைந்த பகுதிகளாக மாற்றியமைக்கப்படும். காலப்போக்கில், இந்த முயற்சிகள், இந்த மாநகரம் முழுவதுமாக பசுமை பூங்காக்கள் நிறைந்த வலையமைப்பு மற்றும் இயற்கையாக இருக்கும் விஷயங்களை தக்க வைத்தல் ஆகியவற்றுக்கு உதவும்.

ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்கா அமைத்தல் பற்றிய யுக்தி என்னவெனத் தெரிந்துகொள்ள, வருகை புரியவும்: www.brampton.ca

**விரைந்து அறிந்துகொள்ள**

- இந்த மாநகரமானது, தற்போது சுமார் 2,500 ஹெக்டேர் இயற்கையான பாரம்பரிய நிலப்பரப்பை பராமரித்து வருகிறது, அவற்றில் பெரும்பாலானவை ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவின் ஆரம்ப கட்ட அஸ்திவாரமாக அமைகின்றன. மாநகரில் ஏற்கெனவே இருக்கும் பூங்காக்கள் இன்னொரு 1,100 ஹெக்டேர் பரப்பளவில் உள்ளன; அவற்றில் கொஞ்சம், ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவுடன் ஒருங்கிணைக்கப்படலாம்.
- ப்ராம்ப்ட்டன் மாநகரில் ஏற்கெனவே உள்ள, மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கும் பூங்காக்களில், இயற்கைச் சூழலுக்கான இடங்களாக யுக்தி ரீதியாக விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை அடையாளம் காண வேண்டியுள்ளது; மாநகரத்தில் இருக்கும் பூங்காக்களின் அமைப்பை இன்னும் சரியாக மதிப்பீடு செய்வதில், ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவிற்கான யுக்தியானது, ஊழியர்களுக்கு வழிகாட்டுகிறது.
- ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்கா அமைப்பானது, நீர் சுத்திகரிப்பு, வெப்பநிலை சமனப்படுத்தல் மற்றும் மழைநீர் வெள்ளம் பாய்தலைக் குறைத்தல் போன்ற முக்கிய சேவைகளை சமூகத்திற்கு வழங்கும் திறனை கொண்டுள்ளது. இது பொருளாதார ரீதியான சேமிப்பினை வழங்குவதோடு மட்டுமல்லாமல், மாறிவரும் காலநிலைக்கு ஏற்றபடி நகர்ப்புறங்களுக்கு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையையும் அதிகரிக்கும்.
- ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவிற்கான யுக்தியானது மாநகரின் கொள்கைகள், யுக்திகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தற்போதைய கட்டமைப்பில் இருந்தே எழுகிறது; இவற்றில் ப்ராம்ப்ட்டன் 2040 (Brampton 2040) திட்டம், ப்ராம்ப்ட்டன் கோ கிரீன் என்விரான்மெண்டல் மாஸ்டர் திட்டம் (Brampton Grow Green Environmental Master Plan), பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு மாஸ்டர் திட்டம் (Parks and Recreation Master Plan), இயற்கைப் பாரம்பரிய சுற்றுச்சூழல் மேலாண்மை உத்தி (Natural Heritage Environmental Management Strategy), நகர்ப்புற வன மேலாண்மை திட்டம் (Urban Forest Management Plan ) ப்ராம்ப்ட்டன் மில்லியன் ட்ரீஸ் (Brampton Million Trees Program) நிகழ்ச்சித்திட்டம் ஆகியவை இந்தக் கட்டமைப்பில் இருந்தே எழவிருக்கின்றன.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ஒரு பசுமையான மாநகரை உருவாக்குவதற்கெனவே மாமன்றம் தன்னைத் தொடர்ந்து அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறது; மேலும் ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவிற்கான யுக்தியானது, எங்கள் சீரான பயணத்தில் மற்றொரு மைல்கல்லை குறிக்கிறது. விரிவாக்கப்பட்ட, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவானது, எங்கள் மாநகரத்திற்கு வழங்கவிருக்கும் பல சமூக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான நன்மைகளை நான் எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.

- *மேயர் பேட்ரிக் பிரவுன், ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

“கடந்த ஆண்டில், காலநிலை தொடர்பான ஒரு அவசரநிலையை அறிவிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் மாநகரமானது 35 வெவ்வேறு சமூகங்களுடன் இணைந்தது. 2050 ஆம் ஆண்டு வாக்கில் ப்ராம்ப்ட்டன் மாநகரில் கிரீன்ஹவுஸ் வாயு வெளியேற்றத்தை 80% அளவுக்கு குறைப்பதே எங்கள் குறிக்கோள் ஆகும், மற்றும் ப்ராம்ப்ட்டன் இயற்கைச்சூழல் பூங்காவிற்கான யுக்தியை ஆமோதிப்பது என்பது, அந்த இலக்கை நோக்கிய மற்றொரு செயல்படியாகும். ப்ராம்ப்ட்டன் மாநகரின் பசுமையான இடங்களைப் போற்றிப் பாதுகாக்க, ஆதரிக்க மற்றும் வளர்ப்பதற்கான சமூக கூட்டாண்மை மற்றும் தலைமையேற்று வழிநடத்திச் செல்வதற்கான மிகச்சிறந்த முயற்சி இதுவேயாகும்.”

- *பால் வின்செண்ட், ரீஜனல் கவுன்சில்லர் மற்றும் தலைவர், பொதுப்பணி மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

“ஒப்புதல் வழங்கப்பட்ட இயற்கைச்சூழல் பூங்காவிற்கான யுக்தியானது, பசுமை நகரமாக ஆக்குவதற்கான மாமன்றத்தின் முன்னுரிமை கொண்ட பணியை முன்னோக்கி எடுத்துச்செல்ல மாநகர ஊழியர்களுக்கு உதவும்; இது, இம்மாநகரின் இயற்கை நில எழிலைப் போற்றிக்காத்தல், மீண்டும் இயற்கையின் இயல்புக்கே விடுதல் மற்றும் அவற்றை மேம்படுத்துதல் ஆகியவற்றைச் செய்யும் வண்ணம் பிராம்ப்டனின் நகர்ப்புற மற்றும் இயற்கை இடங்களை விரிவுபடுத்தி, ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பூங்காக்கள் வலையமைப்பை உருவாக்குகிறது.”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் மாநகரம்*

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca